விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார ரோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து
அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம் செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

'சகலகலாவல்லி மாலை'
சரஸ்வதி பூசையை
முன்னிட்டு
'சகலகலாவல்லி மாலை'
என்ற புத்தகத்தையும்
சரஸ்வதி படத்தையும்
பெற விரும்புவோர்
50 மில்க் வைற் நீல
சோப் அல்லது 5 பார்
சோப் மேலுறைகளை
அனுப்பிப் பெற்றுக்கொள்
ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

மலர் 21 ஆவணி 31 ஷவ்வால் 23 ஞாயிற்றுக்கிழமை (16—9—79) இதழ் 216

தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து

OF SRI LANKA RECEIVED

சிறுபான்மையினருக்கு உத்தரவாதம்

# இலங்கை அரசியல் அமைப்பு; தமிழக மக்கள் வரவேற்பு

## நாடு திரும்பிய அமைச்சர் 'இராசு பெருமிதம்'

(கொழும்பு)

"இலங்கையின் புதிய அரசியல் அமைப்பில் தமிழ்மொழிக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்து குறித்தும் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதத்திற்கும் தமிழ் நாட்டு மக்கள் நல்ல வரவேற்பளிக்கின்றனர்,

இவ்வாறு அண்மையில் தமிழ்நாடு சென்று திரும்பிய பிரசித்திய அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல அமைச்சர் திரு செல்லையா இராஜதுரை நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்.

3 வாரங்கள் தமிழ்நாட்டில் உத்தியோகபூர்வ சுற்றுப்பிரயாணம் செய்த திரு. செ. இராஜதுரை நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

இந்தியாவில் கூடத் தமிழ்மொழியில் அரசாலமைப்புக் கிடையாதென்று தமிழக அமைச்சர் ஒருவர் தன்னிடம் தெரிவித்ததாகவும் திரு. இராஜதுரை கூறினார்.

இலங்கை அரசியலமைப்பில் மக்களை எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பட்டுள்ளதாகத் தமிழக மக்கள் கருதுகிறார்கள் மற்றும் திரு. செ. இராசதுரை மேலும் கூறியதாவது:-

(10-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கச்சேரியில் இரு இளைஞர்கள் கைதாகிவிடுதலை!

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண அரசாங்கச் [illegible] பிறப்புச் சாட்சிப்பத்திரம் பெறுவதற்குச் சென்ற இரு வாலிபர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் நண்பகல் இச்சம்பவம் நடந்தது. வேலை பெறுவதற்காக வெளிநாடு செல்வதற்கு இடம்கேட்ட விசிட்டுக்கு விண்ணப்பிப்பதற்குத் தமது பிறப்புப் பத்திரத்தைப் பெறுவதற்காக கடந்த இரு தினங்களாக இந்த வாலிபர்கள் யாழ். அரசாங்கச் செயலகத்திற்குச் சென்றனர்.

(10-ம் பக்கம்பார்க்க)

## ஜே. ஆர். பிறந்த தினவிழா

## யாழ். மாவட்டத்தில் விசேட நிகழ்ச்சிகள்

(யாழ்பாணம்)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் 74-வது பிறந்த தினத்தை யொட்டி யாழ் மாவட்டத்தில் விசேட நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வைபவங்களை யாழ். மாவட்ட ஐ. தே. கட்சியினரும், யாழ். மாவட்டதேசிய பொது ஊழியர்சங்ககூட்டணியினரும் யாழ். அரசாங்க அதிபரும் கூட்டாக ஒழுங்கு செய்துள்ளனர்;

ஆரம்ப நிகழ்ச்சியாக இன்றிரவு 8-00 மணி தொடக்கம், நாகவிகாரையில் 'பிரித்' ஓதும் வைபவம் இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை காலை 6-30 யாழ் நாகவிகாரையில் 100 பௌத்த பிக்குகளுக்கு தானம் வழங்கப்படும் 8-45 பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோவிலில் 78 சகஸ்ர நாம அர்ச்சனை; 9-00 யாழ். இன்னப்பர் ஸிவாசலில், விசேட தொழுகை, முஸ்லிம் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கல், 9-30 யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் மரம் நாட்டுவிழா.

10-15 வசாவிளான் மகா வித்தியாலயத்தில் மரம் நாட்டு விழா, 10-30 சரசாலை திக்கம் பலம் ஆலயத்தில் விசேட பூசை,

11-00 நல்லூர் கந்தசுவாமி கோவில் சகஸ்ரநாமஅர்ச்சனை, 11-30 நாகவிகாரையில்தானம் வழங்கல், பகல் 12-00கொழும்புத்துறை வயோதிபர் இல்லத்தில், உணவுவழங்கல் 12-15 கைதடி அநாதை இல்லத்தில் ஆடைகள் வழங்கல், கைதடி வயோதிபர் இல்லத்தில் உணவு வழங்கல்.

12-45 திருநெல்வேலி முத்துத்தம்பி அநாதை இல்லத்தில் உணவு வழங்கல், 1-00 மருதனாமடம், உடுவில் அநாதை இல்லங்களில் உணவு வழங்கல், 1-15 பருத்தித்துறை அம்மன் கோவிலில் அன்னதானம்,

மாலை 3-00 ஊர்காவற்துறை வாடிவீட்டுக்கு அடிக்கல் நாட்டுதல் 5-00 யாழ். சுதிந்திறல் இறிஸ்தவ ஆலயத்தில் விசேட ஆராதனை.

(10-ம் பக்கம் பார்க்க)

மேர்ச்சன்ற் பினன்ஸ் லிமிட்டெட்

டீசல் லொறிகளுக்கு அடகுப்பணம் பெறுதல்

புதிய அல்லது நல்ல நிலைமையிலுள்ள புதிதல்லாத டீசல் லொறிகளுக்கு அடகுப்பணம் பெறும்போது எங்கள் வாடிக்கையாளரின் செலவைக் குறைப்பதற்காக, முதலில் இக்கடன்களை வியாபார வங்கிகளின் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கே முயற்சிசெய்வோம். தேவையான சந்தர்ப்பங்களில், தகுதிவாய்ந்தவர்களுக்கு எமது உத்தரவாதத்தைக் கொடுத்தும் கடன் பெற உதவிசெய்வோம்.

வங்கிக்கடன்கள் உடனடியாகப் பெறமுடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் தகுதிவாய்ந்தவர்களுக்கு நாங்கள் வாடகைக் கொள்ளவனவு மூலம் பணம் கொடுப்போம்.

செ. லோகநாதன்
தலைவர்
மேர்ச்சன்ற் பினன்ஸ் லிமிட்டெட்,

129, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

கப்பல்களில் வேலை

P. M G Certificate RADIO OFFICERS
National institutes பயிற்சிகளுக்கு 2-ம் பக்கம் விளம்பர இல. 3614 ஐ பார்க்கவும்

3615

## ஜனாதிபதி யாழ். மாவட்ட இளைஞர்களின்

# ஆற்றலினைப் பயன்படுத்த திட்டங்கள் வகுத்துள்ளார்

மாண்புமிகு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களது நீண்ட ஆயுளுக்காக வேண்டி இலங்கை வாழ் மக்கள் இன்றும் நாளையும் நாடு பூராகவும் சமய அனுஷ்டானத்தினைக் கொண்டாடுகின்றனர் என்றுமில்லாதவாறு இம்முறை யாழ். மாவட்ட மக்களும் இந்த அனுஷ்டானத்தில் பங்கு கொண்டு சிறப்பிப்பதற்குள்ளனர்.

ஜனாதிபதி அவர்களது 74வது பிறந்த தினத்தினையொட்டி நடாத்தப்படும் இந்தச் சமய அனுஷ்டானத்தினை சாதி மத பேதமின்றி கொண்டாடுவதில் யாழ். மாவட்ட மக்கள் மட்டற்ற மகிழ்வடைகின்றனர்.

எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ். மக்களுக்காகப் பலவித சேவைகளையும் செய்த ஜனாதி



யாழ் அரச செயலகத்திற்கு அரச அதிபராகவும் மாவட்ட அமைச்சின் செயலாளராகவும் தமிழ் மகனை நியமித்து மக்கள் பிரச்சினைகளை இலகுவாகவும் சுமுகமாகத் தீர்க்கக் கூடியதாகச் செயற்படுத்தியமை மூலம் இவரது நல்லெண்ணத்தை எவரும் அறிந்திருப்பர்.

கடந்த காலங்களிலும் பார்க்கப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்குமிடத்து எல்லா இன மக்களும் பாகுபாடின்றி மதிக்கப்படவேண்டுமெனச் செயற்பட்டிருக்கிறார்.

இளைஞர்களின் ஆற்றலை நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் எவ்வாறு செயற்படுத்தலாமென பல திட்டங்களை வகுத்துள்ள ஜனாதிபதி யாழ் மாவட்ட இளைஞர்களின் ஆற்றலினையும் பயன்படுத்துவதில் நல்ல பல திட்டங்களைத் தீட்டியுள்ளார். இளைஞர்களிடையே பரஸ்பரம் நல்லெண்ணம் ஆக்கபூர்வ சிந்தனை ஆகியவற்றினை இந்த சமய அனுஷ்டானத்தின் மூலம் ஏற்படுத்தக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

எதிரிவீர பிரேமரத்தின
(ஐ. தே. க. இளைஞர் முன்னணி செயலாளர்)

யாழ்-நல்லூர் கந்தசாமி கோவிலில் இந்துக்களும், சுதிற்றல் கோவிலில் கிறிஸ்தவர்களும், யாழ் நாகவிகாரையில் பௌத்தர்களும் கரீவியில் முஸ்லிம்களும் இவ்வனுஷ்டானத்தைக் கொண்டாடவுள்ளனர்.

ஜனாதிபதியின் நீடிய ஆயுளுக்காகப் பிரார்த்தனை செய்யப்படும் இவ்வைபவத்தின் மூலம் மக்களிடையே சமய சமூக ஒற்றுமையை ஏற்படவும் கூடியதாக இருக்குமென

பதி அவர்கள் நீண்ட ஆயுளைப் பெறுவதன் மூலம் தொடர்ந்தும் மக்களுக்காகச் சேவை யாற்றமுடியும்.

இதுவரையில் எதுவும் குறிப்பாகக் குறிப்பிடப்படாத காலத்தில் வட, கிழக்கு மாகாணத்திற்குத் தமிழ்மொழி உபயோகம், இந்து கலாச்சாரத்திற்காகப் புதிதாக ஓர் அமைச்சினை உருவாக்கியமை பரவலாக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட மூலம் கணிசமான தொகை நிதியினை யாழ். மாவட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கியமை

எமது கலாச்சாரத்தின்படியும் நாட்டின் நன்மை கருதியும் மக்களால் நடாத்தப்படும் இவ்வனுஷ்டானம் எமது நாட்டின் நிலையான ஆட்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் வழிகோலுமென எதிர்பார்ப்போம்.

## யாழ். கல்வித்திணைக்களத்தில் வாகனம் எதுவும் கிடையாது

### மாவட்ட அமைச்சரிடம் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 800 வேலைத்தளங்களில் கல்விப் பகுதியினரால் மேற்கொள்ளப்படும் வேலைகளை நேரில் மேற்பார்வையிடுவதற்கு செல்ல யாழ். கல்வித் திணைக்களத்தில் ஒருவாகனம் கூட கிடையாது.

இதுபற்றி யாழ். மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு யாழ் கல்வி இலாகாவுக்கு ஒரு வாகனம் அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது.

மாவட்ட அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டுள்ள புகாரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது!-

யாழ். கல்வித் திணைக்களத்திலுள்ள வாகனம் ஏற்கனவே பழுதடைந்து விட்டதால், திருத்துவதற்காகவிடப்பட்டுள்ளது. இவ்வாகனம் அடிக்கடி பழுதடைவதால், கல்விப்பகுதி உத்தியோகத்தர்கள் இவ்வாகனத்தில் செல்லமுடியாமலிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் தற்போது 800 பாடசாலைகளில் பல்வேறுவிதமான கட்டட வேலைகள் நடைபெற்று வருகிறது. இவ்வேலைகள் யாவும் இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் பூர்த்தியாக வேண்டியவையாகும்.

டிசம்பர் மாதத்தில் இவ்வேலைகள் பூர்த்தியாகாத பட்சத்தில் இவ்வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் திருப்பப்படும் எனக் கூறப்படுகிறது.

ஒவ்வொரு வேலைத்தலத்திற்கும் சென்று வேலைகளை நேரில் பார்வையிட யாழ். கல்வி இலாகாவுக்கு 'ஜீப்' வண்டி ஒன்று அவசியமாகிறது. குறிப்பாக கிளிநொச்சி, அளிகாவற்றுறை பகுதிகளில் நடக்கும் வேலைகளைப் பார்வையிட அவசியம் ஜீப் வண்டி தேவையென மாவட்ட அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(க-கு)


## பதவி வெற்றிடம்

### முகாமையாளர் (ஆண்கள்)

தகைமைகள்.

(1) ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த.ப. (சாதாரண) சித்தியும், கூட்டுறவு வேலையாளர் (சாதாரண) தராதரப் பத்திரமும், இரும்புவேலை, மரவேலை அனுபவமும், அல்லது இரும்பு விற்பனை நிலையத்தில் பெற்றுள்ள அனுபவம்

(2) வயது: 25—35

(3) சம்பளம் : 180—320 (அடிப்படை 8×10 10×6 சம்பளம்)

(4) விண்ணப்ப முடிவு திகதி: 30-09-1979

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர்,
காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்கம்,
நீர்வேலி.

36 3


## "உடைவுகள்" ஆய்வரங்கு

(கொழும்பு)

பரிசு எழுத்தாளர் காவலூர் எஸ் ஜெகநாதனின் "உடைவுகள்" குறுநாவல் ஆய்வரங்கு இன்றுஞாயிற்றுக்கிழமை கொழும்பு, கிருஷ்டி இலக்கிய வாசகர் வட்டப் பணிமனையில் திரு. அந்தனி ஜீவா தலைமையில் நடைபெறவுள்ளது.

திருவாளர்கள் நெல்லை க பேரன், கே. விஜயன், நவாலியூர் நா. சச்சிதானந்தன், மேமன்கவி, மறைமுதல்வன், இணுவையூர் திருச்செந்திநாதன், வித்தகன், தம்பிஐயா தேவதாஸ் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள் பரிசு எழுத்தாளர் காவலூர் ஜெகநாதன் பதிலுரையாற்றுவார். (கு)

## குழந்தைகள் கிளினிக்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிரீன் வைத்தியசாலையில் ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 'திரிபோஷா' மா வழங்குவதற்கும் தடுப்பு மருந்துகள் கொடுப்பதற்கும் இருவாரங்களுக்கு ஒரு முறை சிகிச்சை நிலையம் ஒன்று கிளைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

3½/2 தொன் ஒஸ்ரின் 22 Sri லொறி புதிய தேக்கு பொடி, கியர் பொக்ஸ், இன்ஜெக்ரர் பம், நல்ல நிலைமையில் உள்ள எஞ்ஜின் உடனடி விற்பனைக்குண்டு. பிரூஞ்சு 25,000 ரூபாவுக்கு உள்ளது கு. ஞானச்சந்திரன், 9, புதிய சோனகத் தெரு, திருகோணமலை. 3587

யாழ் மாநகரசபை எல்லைக்குள் பீச் றோட்டில் (சுங்க இலாகா அருகாமை) கடையுடன் கூடிய 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு: S.Selvarajah, F8: Anderson Flats. Narahenpitiya 3589

நல்ல நிலைமையில் உள்ள DL ஸ்கூட்டர் விற்பனைக்கு அல்லது SX, VEGA உடன் மாற்றுவதற்கு உண்டு. கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 3585. C/ ஈழநாடு, யாழ்ப்பாணம். 3585

6 ஏக்கர் வயல் சனசமூகம் ஆற்றங்கரையில் கேவிகந்தசத்தியடியில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். 292/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3611

யாழ் / வண்ணார்பண்ணை பிரம்படிகுள சந்தியில் ஸ்ரேசர் பாவனைக்குகந்த சிறிய கடை உடனடியாக விற்பனைக்குண்டு விபரங்களுக்கு—3/9, பிரம்படிகுள லேன், யாழ்ப்பாணம். 3590

திருநெல்வேலியில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நேரில் வரவும். 311, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3595

E Y 5405 இலக்க பேஜோ 203 மேலதிக கியர் பொக்ஸ் செற்றுடன் விற்பனைக்குண்டு. 71/2, கோவில் வீதி, நல்லூர். 3594

அண்மையில் வாங்கிய புத்தம் புதிய இந்தியன் கிர்லியஸ் M 12 லெவற்றிக் நீர் இறைக்கும் பம்பும் (வண்டியுடன்) 25 அடி பைப்பும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- C. சுப்பிரமணியம், இளைப்பாறிய ஆசிரியர், மல்வம், உடுவில். 3596

கைவேட்டித்துறை ஆதிகோவிலடியில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்புகொள்க- க. வி. துரைசாமி, 'லக்ஷ்மி நிலயம்', மயிலிட்டி. 3554

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்கு கிளைக்கு முகாமையாளர் தேவை. விவசாய, இரசாயன மருந்துவகைகள், நீர் இறைக்கும் யந்திரங்கள் உதிரிப்பாகங்கள் முதலியவற்றில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. நற்சாட்சிப்பத்திரம் முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும், விண்ணப்ப முடிவு தேதி: 30-9-79. விளம்பர இல. 3609 C/o ஈழநாடு லிமிட்டெட். யாழ்ப்பாணம் 3609

வேடைத்திரைச் சீலை தைப்பதற்கு வதவர்க்கர் தேவை. விபரங்களுக்குஉடன்தொடர்பு கொள்ளவும்- அதிபர் மயிலிட்டி தெற்கு, ஞானோதய வித்தியாலயம், தெல்லிப்பழை 3510

பிரபல்யமான படமாளிகை ஒன்றுக்கு ஐந்து வருட அனுபவமுள்ள முகாமையாளர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல 3608, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம் 3608

### தேவை

விஜயதசமி அன்று வித்தியாரம்பம் செய்வோருக்கு அரிச்சுவடி ஏடு கற்பித்துக் கொடுக்க பனை ஓலைச்சாரிபு கொண்டையாகத் தேவை. தொடர்பு கொள்ளுங்கள், மின்னவற், யாழ்ப்பாணம். 3661

அரசாங்கத்தில் சிறுப்பர்களாகவும் (ஆண்/பெண்) சாரதிகளாகவும் (ஆண்) சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பத்திரமும் விபரத்தையும் 25-9-79-க்கு முன் ரூபா 2/-தபால்கட்டளை அனுப்பி பெற்றுக்கொள்ளவும். விலாசம்- வீ. எல். இராசதுரை சண்டிலிப்பாய் கிழக்கு. 3607

யாழ். மாவட்டத்தில் 30-50 ஏக்கர் தென்னந்தோட்டம் தேவை. தொடர்பு: என். வல்லிபுரம். சட்டத்தரணி, சே/பா. தாதிமார் பயிற்சி பாடசாலை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3605

### வாடகைக்கு

டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் உள்ள 52-ம் இலக்கக் கடை வாடகைக்கு விடப்படும். உடன் வரவும் க. பி. தெய்வேந்திரராசா. "வளர்மதி", டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். 3586

### பயிற்சி

சமூகத்திலுள்ள அனைவரும் குறுகிய காலத்தில் இங்கிலீஷ் ஆங்கில மொழியை பேச, எழுத, வாசிக்கக் கூடிய முறையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் உருவாக்கப்பட்டது 'ஸ்போக்கன் இங்கிலீஷ்' (தமிழ்மூலம் ஆங்கிலம்) 'ஸ்போக்கன் சிங்களம்' (தமிழ்மூலம் சிங்களம்). விலை [தனித்தனியே] 12-50. வி.பி.பி. உண்டு. தொடர்புகளுக்கு; The Teacher, 164, Dam Street Colombo-12. 3604

கடற்படைக்கு Radio Officers அடுத்த P M G Certificate Exam-April 1980. பயிற்சி 26-9-79 ஆரம்பமாகும் கால நேரத்தை ஒப்புக்கொண்டு புதிய முறையான Morse codeபயிற்சி Rhythm Method எனப்படும் இந்தப் புதிய மேல்நாட்டு முறை இலங்கையில் இந்த ஸ்தாபனத்தில் மட்டுமே உண்டு. பயிற்சி அளிப்போர்: இரு Radio Officers, ஒரு மின் பொறியியலாளர், ஒரு ரேடியோ பொறியியலாளர். முதல்வாரம் பயிற்சி இலவசம். விபரங்களுக்கு: National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 3614


## இன்று சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)


இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார்கோவில் இராஜகோபுர கும்பாபிஷேக ஆண்டு விழாவும் சங்காபிஷேகமும் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது.

பகல் சங்காபிஷேகம் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும். இரவு விசேட நிகழ்ச்சியாக தமிழகத்தைச்சேர்ந்த அருள்மொழி அரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் 'துன்பம் துடைக்கும் தாள்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

மற்றும் விசேட நாதஸ்வர தவில் கச்சேரிகளும், சதிர் சுந்தரலிங்கம், கண்ணன் ஆகிய குழுக்களின் இன்னிசை விருந்தும் நடைபெறும். (இ)

# விழிப்பு

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்



உடலில் வளர்ச்சிகளும் பிரமிக்கவைக்கும் அவற்றின் செழிப்புகளும் மயக்கிக்கொண்டிருக்க, குறுகிய வட்டத்தினுள் நினைவுகளை படரவிட்டு பரபரக்கும் உள்ளத்துடன் வாலைக் குமரியாக இருந்த இந்திரா ஞானஸ்கந்தனை கலியாணம்செய்து ஒருசில மாதங்கள்தான் கழிந்திருந்தன

இளமைக் கனவுகள், பருவ உடலின் கிளர்ச்சிகள், மனத்தின் எழுச்சிகள், எல்லாம் செயல்திறன் பெற்று இன்ப உணர்வுகளை அள்ளித்தருகின்ற அபூர்வமான நாட்கள் அவை.

பொழுது புலர்வதும், மறைவதும் தெரியாமல் பெற்றோர், உற்றார், நண்பர்கள், ஏனையோரின் அன்பும், பாசமும் வெறும் மாய நிழல்களாகத் தோற்றமளிக்க உள்ளம் வானத்தில் பறக்கும் பறவையாக மாறி பறந்துகொண்டிருந்தது

பெற்றவர்களையும், பிறந்து வளர்ந்த வீட்டையும் விட்டு பிரியும்போது நெஞ்சத்தில் துயரத்தின் நெருடல் மெதுவாகத் தோன்றினாலும் இனிய நினைவுகளில் அதனை ஆழப் புதைத்துவிட்டு கணவனுடன் புறப்பட ஆயத்தமானாள் இந்திரா.

அம்மா அழுதாள், அக்கா அழுதாள், தங்கை அழுதாள் -இந்திராவின் இந்த பிரிவு அவர்களை வெகுவாக வாட்டியது.

'சீச்சீ எதற்காக அழுகிறீர்கள்; நான்தான் அடிக்கடி வந்து போவேனே'' என்று அவர்களை அவள் சமாதானப்படுத்தினாள்.

கணவனுடன் அந்த ஊருக்கு வந்துசேர்ந்த பின்னர் தான் அவதானித்தாள் அது அவ்வளது நவீனவசதிகள் கொண்ட நகரம் அல்ல என்பதை.

கொஞ்ச பின்தங்கிய பிரதேசந்தான் அவளுக்கு இப்போது வழக்கமான அவளது பயம் அவளுள் விழித்துக் கொண்டது. கணவனுடன் சொந்த இடத்தைவிட்டு வெகுதூரத்துக்கு அப்பால் வந்துவிட்டோமே என்ற உணர்வு உள்ளத்தில் உருவான பயத்தை மேலும் வளரச் செய்தது.

முன்பின் பழக்கமில்லாத சூழ்நிலை, தெருக்கள், வீடுகள், அறிமுகமில்லாத மனிதர்கள் -அவர்களது பேச்சுகள், நடவடிக்கைகள் எல்லாமே புதுமையானவையாகவும் வியப்பூட்டுவனவாகவும் அவளுக்குத்தெரிந்தன.

இவர்களுடன் எப்படிப் பழகப் போகிறேன்? எவ்வாறு உறவாடப் போகிறேன்? என்ற நினைப்புக்கள் எல்லாம் புதிதுபுதிதாக அவள் மனத்தில் முளைவிட ஆரம்பித்தன.

பொதுவாகவே அவள்பயந்த சுபாவத்தை உடையவள் சிறு வயதில் இருந்தே பயம் அவளுடன் வளர்ந்து அவளுடன் ஒட்டிக்கொண்டு நிற்கின்றது. ''பயந்தாங்கொள்ளி'' என்றுதான் அவளை வீட்டில் உள்ளோர் அழைப்பது வழக்கம்.

வீட்டுக்குள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கோ அல்லது ஒரு அறையில் இருந்து இன்னொரு அறைக்கோ இரவில் போவதற்கு அவளுக்குத் துணை வேண்டும்.

இந்த பயந்த நடுங்கும் சுபாவத்தால் அவள் கல்லூரியில் படிக்கும்போதுகூட அவளுடைய சினேகிதிகள் அவளுக்குப் பயங்காட்டி அழச் செய்வதில் அதிக அக்கறை காட்டுவார்கள்.

''இந்திரா - இப்படி எதற்கும் பயந்துகொண்டு இருந்தால் ஒருகாலத்தில் கலியாணம் முடிந்து தனிய இருக்கும் போது என்னசெய்யப் போறாயோ தெரியாது'' என அவள் அம்மா கூறுவாள்.

''அதற்கு அப்ப அக்காவின்ரை புருஷன் துணை இருப்பார் தானே'' என்று இந்திராவின் தங்கை சொல்லுவாள். ''அப்படியென்றால் உத்தியோகம் பார்க்காத புருஷனைத் தான் இந்திராவுக்கு கலியாணம் செய்துவைக்க வேண்டும்!'' என அம்மா சொல்லிச் சிரிப்பாள்.

புதுஇடத்துக்கு வந்த பிறகு அம்மா அடிக்கடி சொன்னதை இந்திரா நினைத்துக் கொண்டாள்.

அம்மா சொன்னதுபோல புதுஇடத்தில் தனிய எப்படி வாழ்க்கையைக்கொண்டு நடத்தப் போகின்றேன். என நினைக்கும்போது கலக்கமாகத்தான் இருந்தது,

அளவான சிறு வீட்டில் அவர்கள் குடியமர்ந்தார்கள். ஞானஸ்கந்தன் காலையில் வேலைக்குப் புறப்பட்டான், திரும்பி வர இரவாகிவிடும், அப்படியான வேலை அவனுக்கு

மற்றைய வேளைகளில் அவள் அந்த வீட்டில் தனியே இருக்க வேண்டும், அதுதான் அவளுக்குப் பயத்தை மேலும் ஊட்டியது, தனிமையாக இருப்பது ஒரு பயங்கரம், அதைவிட புதிய இடத்தில் தனியாக இருப்பதுதான் அதிபயங்கரமாக அவளுக்குப்பட்டது.

சில வேளைகளில் - அவசரமாகப் பொருட்கள் வேண்டுவதற்கு அவள்தான் கடைக்குப் போகவேண்டும். வீட்டைப் பூட்டிக்கொண்டு தெருவில் இறங்கி-கடைக்குப் போகும் போது தெருவில் போவோர் வருவோர் அவளை விழிகளால் துழாவுவது அவளுக்குச் சங்கடத்தைக் கொடுக்கும். தலை நிமிர்ந்து பார்க்கவே அவளுக்குப் பயமாக இருக்கும், சில பேர் வேண்டுமென்றே அவளைப் பார்த்துச் சிரிக்கும்போதும் தெருவில் நடக்கும்போது முன்னால் அல்லது பின்னால் யாராவது நடந்துவந்தாலும் உடல் நடுங்கத் தொடங்கி விடும்.

யாரையாவது துணைக்கு வைத்திருக்கலாமென்றால் வேலைக்கு ஆள் பிடிப்பதுகூட அந்த ஊரில் கஷ்டம். அம்மா தன்னுடன் வந்து இருந்தால் கூட நல்லது என சில வேளைகளில் நினைப்பாள்.

ஆனால் கல்லூரிகளில் படிக்கும் தங்கைகளை விட்டு அவள் எப்படி வருவாள் என தனக்குத்தானே சொல்லிக் கொள்வாள்

வீட்டில் கணவன் இல்லாத சந்தர்ப்பங்களிலே வீட்டுக் கதவை இறுகப் பூட்டிவிட்டு, பயங்கரமான கனவு காணுபவளைப்போல அவள் இருப்பாள்.

சில சந்தர்ப்பங்களில் கதவு திறந்திருந்தால் திறந்திருந்த கதவினூடாக யாராவது சிலர் நின்று வேடிக்கை பார்ப்பார்கள், அப்போதெல்லாம் இந்திராவின் உடல் பயத்தினால் விறைத்துப்போய்விடும்,

ஒருநாள் தாடி வளர்த்து பயங்கரமான தோற்றமுடைய ஒரு பிச்சைக்காரன் பிச்சை கேட்டுக்கொண்டு வீட்டுக்குள் வந்துவிட்டான், அவனைக் கண்ட பயத்தினால் 'வீல்' என இந்திரா அலற அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அங்கு வந்துசேர சற்று நேரம் ஒரே அமளியாகிவிட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஞானஸ்கந்தன் இந்திராவுக்கு வைத்திலிங்கத்தை அறிமுகம் செய்துவைத்தான், நடுத்தர வயதைக் கடந்துவிட்ட வைத்திலிங்கத்தார் குடும்பமாக அதே தெருவில்தான் வசித்து வந்தார்,

அவரது குடும்பத்தில் அவரும் மனைவியுமதான். பிள்ளைகள் ஒன்றுமில்லை, வைத்திலிங்கத்தார் தனக்கு தூரத்து உறவினர் என்றும சமீபத்தில்தான் அதைத் தெரிந்து கொண்டதாகவும் ஞானஸ்கந்தன் சொன்னான்,

வைத்திலிங்கத்தார் அடிக்கடி வந்துபோனார். அவசர வேளைகளில் உதவி புரிந்தார். கடைக்குப்போய் பொருட்கள் வேண்டுவதுபோன்ற சந்தர்ப்பங்களில் அவர்தானேபோய் பொருட்களை வாங்கிக் கொண்டுவருவார்

'இந்திரா—இந்திரா' என்று பரிவுடன் அவர் அழைப்பார். அது காரணமாக அவளுக்கு அவர்மேல் நல்ல மதிப்பு ஏற்பட்டது.

காலையில் ஒன்பது மணிக்கு மேல் அவர் வருவார். சந்தைக்கும் கடைக்கும்போய்பொருட்களை வாங்கிக்கொண்டு வருவார். சிறிதுநேரம் அமர்ந்திருப்பார். இந்திரா கொடுக்கும் தேநீரை வாங்கிக் குடிப்பார், இதுவே அவரது நாளாந்த நடவடிக்கைகளாக மாறின.

நாளாக நாளாக அவரது தொடர்பு வெகுவாக நெருங்கி வந்தது. வைத்திலிங்கத்தாருக்குத் தெரியாமல்-அவருடைய உதவியில்லாமல் எந்த விதமான நிகழ்ச்சியும் அந்த வீட்டில் நடைபெறவில்லை,

இந்திராவை கோவிலுக்குக் கூட்டிக்கொண்டுபோதல், சுகமில்லாத வேளைகளில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லுதல் போன்ற விஷயங்களுக்குகூட வைத்திலிங்கத்தார் துணைபுரிந்தார்,

இப்படி வைத்திலிங்கத்தார் எதற்கெடுத்தாலும் துணை புரிந்துகொண்டு வந்த சமயத்தில்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

கதவு தட்டும் சத்தம் கேட்டது. இந்திரா கதவைத்திறந்தாள், எதிரே வைத்திலிங்கத்தார் நின்றுகொண்டிருந்தார்,

'வாருங்கள்' என அவரை வரவேற்று அன்புடன் உள்ளே அழைத்துச் சென்று கதிரையில் இருக்கச் சொன்னாள். பிறகு ஏதோ அலுவல் காரணமாக குசினியை நோக்கி நடந்தாள்.

ஆனால் வைத்திலிங்கத்தார் கதிரையிலிருக்காமல் தன்பின்னால் நடந்துவருவதை- கண்ட இந்திரா திரும்பியபோது......

வைத்திலிங்கத்தார் அவள் கையைப் பிடித்தார். அவள் அதிர்ந்து போனாள்.

''என்ன...இது'' என தடுமாறியவாறு அவர் பிடிக்குள் அகப்பட்டிருந்த தனது கையை இழுத்தாள். ஆனால் வைத்திலிங்கத்தார் கையைவிடவில்லை.

''என்னால் இனியும் பொறுமையாக இருக்கமுடியாது இந்திரா என்னவோ தெரியாது, உன்னில எனக்கு அதிக ஈடுபாடு'' என்று ஏதோவெல்லாம் புலம்பியவாறு அவர் இந்திராவைதன் அருகில் இழுக்க முயன்றார்

உடல் நடுங்கி வியர்வையால் குளிக்க பயந்து தடுமாறிக் கொண்டிருந்த அவளுக்கு எப்படித்தான் துணிச்சல் வந்ததோ தெரியாது அவரை உதறித்தள்ளிவிட்டு அருகில் இருந்த விளக்குமாற்றினைஎடுத்து கண்டபடி விளாசிவிட்டாள்.

அடி அகோரத்தை தாங்க முடியாத வைத்திலிங்கத்தார் தப்பினால் போதும் என்று நினைத்தவராக விரைவாக அந்த இடத்தைவிட்டு ஓடி மறைந்தார்.

உடலில் பிறந்த உறுதியுடன் இதுவரைகாலமும் உள்ளத்தில் இருந்த பயம் இருந்த இடம் தெரியாமல் மறைய கையில் விளக்குமாற்றுடன் நிமிர்ந்து நின்றாள் அவள்.

தெருவில் கூடி விட்ட சனங்களை அவள் அலட்சியமாக நோக்கினாள்.

[யாவும்கற்பனை]

# பிரமா திருந்தட்டும்

'பிச்சைக்காரன்—'

எல்லோரும் கதையை எழுதிவிட்டுத்தான் தலைப்பு போடுவார்கள். ஆனால் மாதவனோ ஆரம்பத்திலேயே தலைப்பை எழுதிவிட்டுத்தான் கதையை எழுதுவதில் ஈடுபட்டிருந்தார்.

அவரது அறைக்குள் புகுந்த ஒருவர் மாதவனின் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களில் தானும் ஒருவர் என்று அறிமுகமாகிக்கொண்டார்

'சார் நீங்கள் தத்ரூபமாக எழுதுகிறீர்கள். பிரமாவைவிட உயர்ந்தவர் நீங்கள் தான்' அடுக்கிக்கொண்டே போனார் ரசிகர்.

''என்ன பிரமாவைவிட உயர்ந்தவரா?' மாதவன் ஆச்சரியத்துடன் கேட்டார்

'ஆமாம் சார். பிரமா படைக்கும் படைப்புக்கள் சில காலங்களில் இறந்துவிடுகின்றன. ஆனால் நீங்கள் படைக்கும் படைப்புகள் அழிந்துவிடுவதில்லையே' என்றார் ரசிகர். மாதவனின் மனம் மகிழ்ச்சி மேலீட்டால் துள்ளியது.

'நான் இதுவரையில் படைத்ததில் இது ஒப்பற்ற படைப்பு. இதோ எழுதுகிறேனே பிச்சைக்காரன் என்ற கதை, இதைப் படிப்பவன் எவனாக இருந்தாலும் பிச்சைக்காரனைக் கண்டால் தன்னால் இயன்ற உதவியை செய்யாமலிருக்கமாட்டான். நிச்சயம் எல்லாப் பிச்சைக்காரர்களுமே இந்தக் கதையால் பயனடையத்தான் போகிறார்கள்.' எழுதிக்கொண்டிருந்த கதையைப் பற்றி பிரசங்கமே செய்துமுடித்தார் மாதவன்.

ரசிகரும் அவர் சொல்லுவதை தேவ வாக்காக நினைத்து தலையாட்டிக்கொண்டார்.

ஒரு ரூபா நாணயத்தைக் கொடுத்து மூக்குப்பொடி வாங்கிவருமாறு வந்தவரை உத்தரவிட்டார் மாதவன்.

அவரும் கடவுளுக்குத் தொண்டுசெய்ய சந்தர்ப்பம் கிடைத்ததுபோல் தொண்டு செய்யப் புறப்பட்டபோது தான் வாசலில் வந்தடைந்த பிச்சைக்காரன் ஒருவன் 'ஐயா பசிக்குதுங்க' என்றான்;

'சீ... நாயே வெளியே போ' மாதவனின் குரல் பலமாக ஒலித்தது;

'ஐயா! காப்பணத்தையாவது கொடுப்பம்' என்று ஆலோசனை கூறினார் ரசிகர்.

'இவங்களுக்கெல்லாம் ஒரு சதமும்கொடுக்கக்கூடாது சமுதாயத்திலிருந்தே களையப்பட வேணும்' என்றார் மாதவன். ரசிகரும் அதை ஏற்றுக்கொள்வதுபோல் பொடிவாங்க விரைந்தார்.

'பிச்சைக்காரன்' கதை எழுதி முடிந்துவிட்டது. கவரில் போட்டு; பத்திரிகைக் காரியாலயத்திற்கு அனுப்புவதற்கு ஓட்டமும் நடையுமாக சென்றுகொண்டிருந்தார் மாதவன். காலிலே ஓர் உருவம் தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தார்.

சற்று நேரத்துக்கு முன்னர் பசிக்கொடுமையால் பிச்சை கேட்டுவந்த பிச்சைக்காரன் இறந்துகிடந்தான்.

'இவங்களெல்லாம்இப்படித் தான் சாகவேணும்' என்றவாறு மாதவன் தபால் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

பிரமாவே திருந்தாதபோது அவரால் படைக்கப்படும் படைப்புக்களா திருந்தப் போகின்றன-

-எஸ். குகநாதன்-

## அமுல்!

இரைகட
லோடியுந்
திரவியந்
தேடென்று
எப்போதோ
ஒளவை
சொன்னது;
இப்போதிங்கு
அமுலில்
வந்தது!

-புலோலியூர்
ஆ. இரத்தினவேலோன்

## பெண்களுக்கு மகிழ்ச்சி செய்தி

திடீர் தோசை, திடீர் இரசம் போல இனி நம் பெண்கள் திடீர்இடியப்பத்தையும் நினைத்தவுடன் தயாரிக்கலாம். பொலிதீன் பைகளில் அடைக்கப்பட்டுள்ள இடியப்பத்தை கொதிநீரில் மூன்று நாலு நிமிடங்களுக்கு அமிழ்த்தி விட்டு வெளியே எடுத்து இரண்டுமூன்று நிமிடங்கள் வைத்தபின் இடியப்பத்தை உடன் பரிமாறலாம்.

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினர் மேற்கொண்ட பரிசோதனை மூலம் இத் திடீர் இடியப்பம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் தயாரிப்பும் இலகு. நீராற இடியப்பத்தை 50-60 பாகை வரை அவனில் உலர்த்தியபின் பொலிதீன் பைகளில் அடைப்பதன் மூலம் இவ் இடியப்பம் தயாராகிறது. ஒரு பொலிதீன் பை 10 முதல் 50 வரை இடியப்பங்களை கொண்டுள்ளது. சுற்றுலா பிரயாணத் தேவைகளுக்கு இது மிகவும் பயன்படக் கூடியது.

Browns on
வாங்குங்கள்
பிரவுன்சன்
அரறூட்-மா
பிரவுன்சன் அரறூட் மா அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.

# கலாயோகி ஆனந்த குமாரசுவாமி

# இந்தியாவில் பெரும் பதவி; மகாகவி தாகூருடன் சந்திப்பு

வரலாற்றுவாணர்
வை. முத்துக்குமாரசுவாமி

(முன் தொடர்ச்சி)

1908-ம் ஆண்டு விரிந்த ஆராய்ச்சிசெய்யும் நோக்கத்துடன் ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இங்கிலாந்துக்கு வந்தார். இங்கு குளோசெஸ்ரர்ஷயர் எனும் மாவட்டத்திலுள்ள காம்டென் நகரில், முன்னாளில் உவில்லியம் மொறிஸ் என்னும் பேரறிஞரின் அச்சகத்தை விலைக்குப் பெற்றார். இந்த அச்சகத்தில் 'மத்திய காலத்துச் சிங்களக் கலை' என்னும் நூலைக் கையால் செய்யப்பட்ட உயர்ந்த 'ஆட்' காகிதத்திலே 500 பிரதிகளை எழில் மிகு பதிப்பாக வெளியிட்டார்.

இது உலகினுக்கு ஈழநாட்டுக் கலையின் சிறப்புகளை நன்கு பறைசாற்றவல்ல நூலாக அமைந்தது. இலங்கை அரசாங்கம் இதனை சிங்களத்தில் மொழிபெயர்த்து இலங்கையில் அச்சிட்டு வெளிப்படுத்தியது. கண்டி நாட்டுக்கலை, திராவிடக் கலையுடன் இணைந்துள்ளது என்பதை ஆனந்த குமாரசுவாமி தெளிவாக விளக்கியுள்ளார். கடைசியாக ஆண்ட சில கண்டி நாட்டரசர்கள் திராவிட மன்னர்கள் (தெலுங்கர்) என்பதும்-அவர்கள் தமிழை அரசாங்க மொழியாகக்கொண்டிருந்ததும் பலருக்கும் தெரிந்ததே. கண்டி நாட்டுத் தொழிலாளர் தென் இந்தியர் என்பதை பல இடங்களில் ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் கூறியுள்ளார்.

1908-ம் ஆண்டு ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 'இந்தியக் கலையின் சிறக்க செல்வாக்கு,' 'நேத்திரமங்கலய அல்லது கண்ணின் வெவ்வேறு ரூபங்களால் மைதீட்டும் சடங்கு' என்னும் நூல்களை வெளியிட்டார்.

1909-ம் ஆண்டு 'தேசியக் குறிக்கோள்- கட்டுரைகள்' என்னும் நூலை கொழும்பில் அச்சிட்டு பதிப்பித்து வெளியிட்டார். அது இந்தியாவின் தேசிய இயக்கத்தின் முக்கியத்துவத்தைவிளக்கும் கண்ணாடி போன்ற நூல். இதில் 'இந்திய தேசியம்,' 'மாதா பாரதம்,' 'இந்திய கலையின் நோக்கமும் முறையும்,' 'இந்தியாவில் கலையும் யோகமும்,' 'கிழக்கு நாட்டுக் கலையும் மேற்கு நாட்டுக் கலையும்,' 'சுதேசி,' 'இந்திய இசை' முதலிய பல அரிய கட்டுரைகள் உள்ளன. மேலும் 'கீழை நாட்டுச் செய்தி அழைப்பு.' 'இலங்கையிலும் பாவா நாடுகளிலும் உள்ள மகாஜன பௌத்த சிலைகள்' ஆகிய நூல்களையும் அதே ஆண்டில் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் வெளியிட்டனர். இங்கிலாந்தில் 1908—1909 இரண்டு ஆண்டுகள் வாழ்ந்தனர். ஆயினும் பரதகண்டம் எனப்படும் இந்திய நாடு அவரை ஈர்த்தது;

## இந்தியாவில் பதவி

1910-ம் ஆண்டு ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இரண்டாம் முறையாக இந்திய நாட்டுக்குச் சென்றார்; அங்கு ஐக்கிய மாகாணத்தில் யமுனா நதியும், கங்கை நதியும், சரஸ்வதி நதியும் சங்கமிக்கும் புண்ணிய இடத்தருகாமையில் உள்ள திரிவேணி எனப்படும் 'பிரயாக் அல்லது அலகாபாத்' என்னும் நகரில் அன்னாரை இந்திய அரசாங்கம் இந்தியக் கலைப் பகுதித் தலைவராக நியமித்தது. அங்கு பணியாற்றும்பொழுது கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இந்திய நாட்டின் தேசிய கலைவிழிப்பு இயக்கத்தினைச் சிறப்பாகத் தொடக்கிவைத்தார். கல்கத்தாவில் 'முகலாய திரவியங்களும், இராஜபுத்திர ஓவியங்களும்' என்னும் பொருள்பற்றி கீழைத்தேசக் கலை இந்திய சபையினருக்கு (Indian Society of Oriental Art) ஓர் அரிய சொற்பொழிவு ஆற்றினர்;

1910-ம் ஆண்டு- 'மகளிர் பற்றிக்கீழ்நாட்டாரின்கருத்து' 'கலையும்சுதேசியும்,' 'உள்நாட்டுக்கைப்பணியும் பண்பாடும்,' 'இந்திய சித்திரங்கள்,' 'இந்தியக் கலையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில எடுத்துக்காட்டுகள்,' 'இந்திய வெண்கலங்கள்,' 'இந்தியாவினதும் இலங்கையினதுமான கலைகளும் கைப்பணி வேலைகளும்' முதலிய அரிய நூல்களை கலாயோகி அவர்கள் வெளியிட்டார்கள்.

1904-ம் ஆண்டளவில் இந்தியாவின் பிரசித்திபெற்ற தலைவருள் ஒருவராக விளங்கியவரும் 'தத்துவ சமாஜ' [பிரமஞான சபை]த் தலைவராக விளங்கிய அன்னி பெசன்ற் அம்மையார் தாமும் ஆனந்தகுமாரசுவாமியின் மணிவாசகங்களை தமது சொற்பொழிவுகளில் மேற்கோள்களாகக் கையாண்டாரெனில் அன்னாரின் ஏற்றத்தைச் இயம்ப அவசியம் உளதா!

1911-ம் ஆண்டு ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இங்கிலாந்துக்கு வந்தார். அப்பொழுது இன்றுள்ள இந்திய சபையினைத் தொடக்கிவைத்தவர்களுள் இவரும் ஒருவர் ஆவார். அது இப்பொழுது 'ரோயல் [இந்திய-பாகிஸ்தான் - இலங்கை] சபை' என வழங்குகிறது. இதன் முதலாவது தலைவர், கலாநிதி றைஸ் டேவிட் [Rhys David] எனப்படும் பாளிமொழிப்பேரறிஞராவர். ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் மேலே கூறிய சபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தார். இலண்டனில் 'ரோயல் ஏஷியாற்றிக் சொசைற்றி' [ஆசிய வேந்தர் அவையின்] ஆண்டு இராப்போசன விருந்துக்கு] பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்று 'இலங்கையின் கல்விமுறை' பற்றிச்சொற்பொழிவு ஆற்றினர்.

### கவியரசர் இரவீந்திரநாத்தாகூர் சந்திப்பு

இரவீந்திரநாத்தாகூர் உலகம் புகழ்பெற்ற கவி அரசர். அவரோ ஒருவரிடம் ஒரு கருத்தையும் கடன் வாங்குவது கிடையாது- கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியோ மாசிறந்த புலமை வாய்ந்தவர், அவர் உண்மையை நாடுபவர், ரசிக்கும் தன்மையில் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்தவர். இருவரும் மகா ரிஷிகள்- உண்மையிளம்புபவர்கள்;

இம்மானுபாவர்கள் 1912ம் ஆண்டிற்கும் பின்னும் 1917க்கும் இடையில் சாந்திநிகேதன் என்னும் இரவீந்திரநாத்தாகூரின் சர்வதேசப் பல்கலைக் கழகத்தில் கலாயோகி கவியரசரைச் சந்தித்து இந்தியக் கலை, இந்தியச் சமயம் முதலியனவற்றைப்பற்றி உரையாடிப் பேரின்பம் பெற்றனர்.

1913ல் 'இலங்கையினதும் இந்தியாவினதும் கலைகளும் கைத்தொழில்களும்,' 'சக்தி, இந்துப்பெண்ணின் நிலைகள்,' 'சர்வ மக்களுக்கும் கட்டாயக் கல்வி' என்னும நூல்களை கலாயோகி அவர்கள் வெளியிட்டனர்.

1914ல் பிரதானமாகக் கொழும்புப் 'பொருட்காட்சிச் சாலையில் உள்ள 'இலங்கையின் வெண்கலங்கள்' இந்துக்களிடையேயும் பௌத்தர்களிடையேயும் நிலவும் பாரம்பரியக் கதைகள் [சகோதரி நிவேதிதாவுடன்] என்னும் நூல்களை ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் வெளியிட்டனர்.

1915ல் 'கனவி விகாரையின் ஓவியம் தீட்டப்பட்ட மச்சு,' 'மக்கள் நலனுக்கு இந்தியாவின் பங்கு' என்பனவற்றை அவர் பதிப்பித்தார்.

1987 ஏப்ரல் 'இந்து இலக்கியத்தில் காதல்' என்னும் அவர் கட்டுரை வெளிவந்தது.

1918ல்-சிவநடனம் வெளிவந்தது. இது மிகவும் சிறப்பான நூல், சிவநடன தத்துவத்தை மேலநாட்டார் புரியத்தக்கவகையில் தரப்பட்டது.

1920ல்- அமெரிக்க கீழைத்தேச நடனங்கள், சைவசித்தம்,' ஒரு மயிலின் தோகை 'ரூபம்' என்னும் கட்டுரைகளை கலாயோகி அவர்கள் எழுதினர்.

1921ல்- இலங்கைக்குச் சென்று அங்கு இந்திய ஓவியங்கள்பற்றி ரோயல் ஆசிய சபையிலும், பழைய இந்துக் கலைபற்றி கொழும்பு ஆனந்த கல்லூரியிலும் சொற்பெருக்குகள் ஆற்றினர்.

1923-ல் மத்தியகால இந்துசமயம் [ஆசியா 23, 1923] என்னும் கட்டுரை வெளிவந்தது 1924-ம் ஆண்டு கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் நியூயோர்க்கில் ''இந்தியப் பண்பாட்டு நிலையத்தை'' நிறுவி அதன் தலைவராகவும் பணி புரிந்தார். அதன்பின் கொலம்பியா பல்கலைக் கழகத்திலும், டெல்லியிலும் பிற இடங்களிலும் இந்திய- இந்தோனீஷியக் கலைகள் பற்றி சொற்பொழிவுகள் ஆற்றினர்.

1929-ல் ''என்சைக்கிளோப்பீடியா பிரிட்டானிக்கா'' என்னும் ஆங்கிலக் கலைக்களஞ்சியத்திற்கு கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் ''இந்திய இந்தோ-சீன வெண்கலங்களும் பித்தளை அலங்கார வேலைகள்'' பற்றிப் புலமைக்கட்டுரை வழங்கினார்.

அதே ஆண்டில் இந்திய நடனம், [14-ம் பதிப்பு சிக்காகோ] இந்திய — சிங்களக் கலையும் கட்டடக் கலையும் (12ம் பதிப்பு சிக்காகோ), தாமரையின் உற்பத்தி, இந்திய தெய்வங்கள்—தாகூரின் பொன்நூல் என்பனவற்றைக் கலாயோகி அவர்கள் பிரசுரித்தனர்.

### யப்பான் பயணம்

1930-ல் ஆண்டு கலாயோகி யப்பானைத் தரிசித்தார். அதன் பின் முழுக்க முழுக்க கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் தத்துவ சாத்திரத்தில் ஈடுபட்டார்.

1931-ல் பாரசீக சக்கரம் என்னும் நூலை வெளியிட்டார். 1933-ல் இந்து இதயம் வெளிவந்தது. 1936-ல் விஸ்வ பாரதியின் பிரிச்சயமில்லாத கலைகளின் இரசனை வெளிவந்தது. 1936-ல் பூனாவில் உள்ள பண்டார்கார் கீழை நாட்டு ஆராய்ச்சி நிறுவனம் கலாயோகி அவர்களை கௌரவ விசேட உறுப்பினராக நியமனம் செய்தனர்.

### இந்தியசபையின் தலைவர்

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் 1938-ல் உவாஷிங்டனில் உள்ள இந்திய தேசியச்சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய சுதந்திரத்துக்காக அல்லும் பகலும் அச்சபையினர் உழைத்தனர்.

1943ல் கலாயோகி அவர்கள் எழுதிய 'கலைப்பொருட்கள் ஏன் பொதுக்காட்சிக்கு வைக்க வேண்டும்?'' என்னும் நூல் வெளிவந்தது. 1945ல் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் உயர்கல்விச் சுடர் பரப்பும் குறிக்கோள் உடைய உலக அரங்கத்தினை வாஷிங்டனில் நிறுவ ஆக்கமும் ஊக்கமும் நல்கினர்.

1946 ஜூலை 21ல் கலாயோகி தாம் எழுதிய 'அணிகலங்காரம் அல்லது எண்ணத்தின் சின்னங்கள்' என்னும் அழகுக் கலையைப் பற்றிய அரிய கருத்துக்கள் உள்ள நூலை வெளியிட்டார்.

1947 ஏப்ரல் 23-ல் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 'நான் எனது சகோதரனின் காவல்காரனா?' என்னும் அரிய நூலை வெளியிட்டார். இது மனிதனை—கீழ் நாட்டவன் மேல் நாட்டவன் என்று பாகுபாடின்றி, மன்பதையின் சீவனைப்பற்றிய ஓர் ஆராய்ச்சி நூலாகும். 1947-ல் அவர் எழுதிய கடைசி நூல் 'காலமும் சதாகாலமும்' என்பது இது எல்லாச் சமயங்களின் அடிப்படையில் ஒரு மாணிக்கமான தத்துவ ஆராய்ச்சி நூல்.

1947 ஆகஸ்ட் 22ந் திகதி கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியின் 70வது பிறந்த நாளை உலகு எங்கணும் விமரிசையாக மக்கள் கொண்டாடினர். இலங்கையில் சேர். சார்ல்ஸ் கொலின்ஸ் அவர்கள் இலங்கை பல்கலைக் கழகத்தில் 5 வது ஜோர்ஜ் மன்னன் மண்டபத்தில் கலாயோகியின் பூரண ஓவியம் திரைநீக்கம் செய்தனர்.

கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்களின் 70வது பிறந்த நாட்களின்பின், ஐக்கிய அமெரிக்காவில், மசாசுசெற்றில் உள்ள நீட்ஹாம் என்னும் நகரில், 649-ம் இலக்க இல்லத்தில் 1947 செப்ரம்பர் 9ந் திகதி மறைந்தார்.

உலகத்தில் உள்ள பல கலைஞர்கள் புகழ்மாலை கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்களுக்குச் சூட்டினர்.

ஆனந்தகுமாரசுவாமி ஆர்வமிக்க தேசியவாதி. ஆயினும் அவருடைய தேசியப் பண்பாட்டுடன் ஒன்றியது. அது அரசியல் குறிக்கோளுடையதல்ல. அவர் தேசியக் கல்வி இயக்கத்துக்கு ஆதரவு அளித்தார். இந்தியப் பண்பாட்டின், மறுமலர்ச்சிக்காக அரும்பணி ஆற்றினார். இக்குறிக்கோள்களைச் சாதனை ஆற்றவே 1912ல் இலங்கையில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் (கிளை) இலங்கைச் சீர்திருத்தச் சபைகளை நிறுவினார். கொழும்பில் தலைவராக இருக்கவும் சம்மதித்தார்.

ஹான்ஸ்கோன் தமது ''கீழைநாடுகளில் தேசியத்தின் வரலாறு'' என்னும் நூலில் பின்வருமாறு கூறினார்:-

''சென்ற நூற்றாண்டுக்காலத்தினுள் மிகத்தீவிரமான புரட்சி நடைபெற்றது சமூக சீர்திருத்தங்களில் புதியகருத்துக்கள் உருவாகின. இந்திய தேசியம் புதியஅரிச்சுவடியைக் கற்றுள்ளது இருதலைமுறைக்கு முன்னர், இன்றைய சாத்திரிகளும் பண்டிதர்களும் தமது உள்ளுணர்ச்சிகளைத் தன்புறத்தினவற்றை அங்கீகரித்தனர். ஐரோப்பாவில் உணர்ச்சி பொங்கிப் பரவியது போல, ஆசிய சமயக்கொள்கைகள் புத்தம் புதிய உருவங்களை உருவாக்கின. அவை அதிபூர்வமானதும், விளக்கம் தெளிவில்லாத தன்மையாய் இருந்தன. நாட்டில் தேசியம் வேரூன்றியது ஆனந்தகுமாரசுவாமி அவர்களினதும் அவர் காலத்தவர்களினது நூல்களில் காணப்படுவதுபோலக ஆத்மீக பலனைப் பற்றி, மகாத்மாகாந்தி ஆரம்பித்து வைத்த இயக்கத்துடன் சேர அமைந்தது.

எறிக்ஜில் என்னும் சிறந்த கலைவிமர்சகர் ஆனந்தகுமாரசுவாமி அவர்களைப் பற்றித் தமது வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார் அது பின்வருமாறு:-

''உவில்லியம் ரொதென்ஸ்ரெயின் என்னை ஒருவருக்கு அறிமுகம்செய்து வைத்தார். அது மிக்க பயன் ஈட்டியது. என்மீது அவர் காட்டியபேரன்

(6-ம் பக்கம் பார்க்க)

## சூரிய சக்தியில் சமையல்

சூரிய சக்தியை சமையல் தேவைகளுக்குப் பயன்படுத்தும் முறை தற்பொழுது உலகில் துரிதகதியில் பரவி வருகிறது. ஈரானில் 'கோர்ஹிட்' எனும் பெயரில் சூரியசக்தியை பயன்படுத்தி வாழும் கிராமமொன்றே அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 300 குடும்பங்கள் வாழும் இக்கிராமத்தில் சூரிய சக்தியை பயன்படுத்தி ஒருவர் 5 நிமிடத்தில் முட்டை அவிக்கலாம். 90 நிமிடத்தில் ஆட்டுக்கறி சமைக்கலாம் 140 லீட்டர் தண்ணீரை இரண்டு மணித்தியாலத்தில் சூடாக்கலாம். ஒவ்வொரு பின்தோட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள தெறிகருவிகள் சூரிய சக்தியை சேமித்து வெப்பமாக மாற்ற உதவுகின்றன வீடுகள் யாவும் கூடிய வெப்பநிலையைத்தாங்கக் கூடிய விதத்தில் காவலிடப்பட்டு அமைக்கப்படுகின்றன

இந்தியாவில் திரு. வன் ஒப்பன் எனும் ஹைதராபாத் பொருளாதார நிபுணர் சூரிய சக்தியில் இயங்கும் ''சூரிய கூடை'' எனும் அடுப்புக்களை கண்டுபிடித்துள்ளார் காலை 7 மணிக்கு இச் சூரிய கூடைகள் வெய்யிலில் வைக்கப்பட்டால்மாலை 4மணிவரை இதிலிருந்து சமையலை நடாத்திக் கொள்ளலாம். 'சூரியக் கூடை'களைப் பயன்படுத்தி 10 நிமிடத்தில் சோறு காய்ச்சலாம், 20 நிமிடத்தில் கோழிக்கறி சமைக்கலாம். மதியவேளைக்கிடையில் எட்டு பத்து பேருக்கு காணக்கூடிய ஆறுசட்டிகறிகளைக்கூட சமைக்கலாம் இதே வேளை இச் 'சூரியக் கூடைகளை' தயாரிக்க 40 ரூபாவுக்குள்ளேயே செலவாகின்றது. என்பதால் எரிபொருள் தட்டுப்பாடான இக்காலத்திற்கு இம்முறை தலைசிறந்ததாக காணப்படுகிறது.

## தசாம்ச...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பொறுப்புடனும் நடந்து கொள்ளுதல்வேண்டும். குடும்ப நலம் பாதிப்புறும். பெருந் தொழில் புரிபவர்கள் மிகவும் விழிப்புடன் இருத்தல்வேண்டும்.

**எண்: 4**

இவர்களுக்கு இந்த வாரம் உடல்நலம் பாதிப்படையலாம். சரும வியாதிகள் தோன்றக்கூடும். தொழில்துறைகளில் பலவித தாக்கங்கள் ஏற்படலாம், தொழில்முறைகளில் ஒரு சோர்வுக்குணம் காட்டும் நண்பர்களின் தொல்லை மன எரிச்சலைத் தரும். மறைமுகமான எதிரிகளும் இருப்பர். தெய்வ அருள்துணை நிற்பதால் குடும்பத்தில் அன்புக்கும் அமைதிக்கும் இடமுண்டு. ஏமாற்றுப் பேர்வழிகளையிட்டு மிகவும் கவனம் வேண்டும், வாகனச்சாரதிகளுக்கு இந்த வாரம் கூடிய கவனம்வேண்டும்.

**எண்: 5**

இவர்களுக்கு இந்த வாரம் மனச் சிந்தனை மிக வேகமாக வேலைசெய்யும். தொழில்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் பொருள்வரவு முண்டு. கமைகளில் சிறிது தளர்ச்சி ஏற்படலாம். பந்துஜனக் கொண்டாட்டங்கள் களிப்புக்களுக்கும் இடமுண்டு. குடும்பத்தில் மனக்குறை ஏற்படலாம். சிலருக்கு எதிர்பாராத நட்டமும் ஏற்படலாம். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். செலவினங்கள் கூடுதலாக இருக்கும். கஷ்டமான காரியங்களைச் சாதிக்கவேண்டிய நிலை ஏற்படும்.

**எண்: 6**

இவர்களுக்கு இந்த வாரம் புதுவிதமான கற்பனைகள் மனதில் தோன்றும். எழுத்தாளர்களுக்கு மிகவும் போற்றக்கூடிய வாரம். சிக்கலான வழிகளிலேயே மனம் நாட்டம் கொள்ளும். காரிய அனுகூலமுண்டு. மனக்கோட்டை கட்டுவீர்கள். வியாபாரமுறையில் உள்ளவர்களுக்கு முன்னேற்றமுண்டு. நண்பர்களின் உதவி கிட்டும். சில உத்தியோகத்தர்களுக்கு நன்மைகரமான இடமாற்றங்கள் ஏற்படலாம். பயனுள்ள பிரயாணங்களுக்கும் காதர்களின் கொண்டாட்டங்களுக்கும் உகந்த வாரம்.

**எண்: 7**

இவர்களுக்கு இந்த வாரம் உடல் உழைப்புக் கூடுதலாக இருக்கும். போட்டியும் பூசலும் கூடுதலாக இருக்கும், அரசியல் வாதிகளுக்கு எதிர்ப்பேச்சும் எதிர்ப்பும் இருக்கும். உலகப் பிரசித்தமான காரியங்களிலும் இறங்கநேரிடும். சிலருக்கு அமைதியான மந்த நிலை ஏற்படும். சில சமயங்களில் ஏமாற்றத்தால் தாக்கப்படலாம். மேலதிகாரிகளின் தொடர்புள்ளவர்களுக்கு நன்மை ஏற்படும். சில இடங்களில் நல்லதுபோல் காட்டி கெடுதிசெய்யவும் கூடும். விஷயங்கள் யாவும் மூடுபனி போலிருக்கும். கடன்கொடுத்தால் திருப்பப்பெறமுடியாது.

**எண்: 8**

இவர்களுக்கு இந்த வாரம் புரட்சிகரமான மனமாற்றங்கள் ஏற்படலாம். அரசியல்வாதிகளுக்கு இந்த வாரம் புரட்சி மனப்பான்மை, வீண் கரைச்சல்களும் ஏற்படலாம். எழுத்தாளர்கள் வெளிவிவகாரங்களில் ஈடுபடாது இருந்தால் முன்னேற்றமான சாதனைச்சித்தனைகள் உதிக்கலாம், வெளியாரின் புகழ்ச்சிக்கு இடமுண்டு. ஆனால் அதிர்ஷ்டம் குறைவாகவேயிருக்கும், இவர்களுக்கு முன்னேற்றங்களைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டமிடவும் கூடும், சிலருக்குச் சரும நோய்கள், காயங்கள் ஏற்படவுங்கூடும்.

**எண்: 9**

இவர்களுக்கு இந்த வாரம் தொழில்துறைகளில் நல்ல முன்னேற்றமும் பொருள்வரவுமுண்டு, எதிர்பாராத அழைப்புக்கள். பொருள் வரவுகளுக்கு இடமுண்டு, எனினும் குடும்ப வாழ்க்கையில் பெரும் சிக்கல்களும் ஏற்பட இடமுண்டாகலாம், சிலர் குடும்பப் பிரச்சினைகளால் நீதி மன்றங்கள் செல்லவும் நேரிடலாம். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நம்பிக்கை ஏற்பட இடமுண்டு.

'வரதி'
சி. அ. செல்வத்துரை
கரவடி,
ஆனைக்கோட்டை.

---

### விவசாயிகள்

# விதை உருளைக்கிழங்கு செலவைக் குறைக்க ஒருவழி

**யாழ்.** குடாநாட்டு விவசாயிகளின் முக்கிய உற்பத்திப் பொருட்களிலொன்றாக உருளைக்கிழங்கு மாறியுள்ளது. ஆனால் விதை உருளைக்கிழங்கின் அதிலும் சின்னஅளவு கிழங்கின் விலை விவசாயிகளுக்கு பெரும் சுமை என்பதை யாரும் மறுக்க முடியாது, ஆயினும் பெரிய விதைகிழங்கை துண்டங்களாக வெட்டிப் பயன்படுத்துவதன் மூலம் ஏக்கரொன்றுக்கு தேவையான விதையுருளைக்கிழங்கின் அளவை 50 வீதத்தால் குறைக்கலாமென பதுளை மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் பெரியசாமி கருத்து தெரிவிக்கின்றார். விவசாயப் போதனாசிரியர் திரு எம். றணவீரா விவசாயிகளது உதவியுடன் இதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட பரிசோதனைகள் வெற்றியையளித்துள்ளன. ஆனால் விதை கிழங்கைவெட்டி நடுகைக்கு பயன்படுத்துகையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தும் வண்ணம் சுமத்தோட்டமுள்ளோர் விதைநடுகைப் பொருட்டுக்கேட்டு அறிவுறுத்துகிறது

1. நோய், பூச்சி, புழுக்களின் தாக்கமற்ற பயிர்களிலிருந்து வீரியமான கிழங்கை தெரிவுசெய்யவும் (இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கை பயன்படுத்தாவிடின்)

2. பழையனவாகவும் வரடியும் காணப்படும் கிழங்கை தெரிவுசெய்யக்கூடாது.

3. கிழங்குகள் 3 அவுன்சுக்கு கூடியநிறை உடையதாயிருக்க வேண்டும்.

4. வெட்டப்பட்ட துண்டுகள் ஒவ்வொன்றும் குறைந்தது இரண்டு அரும்புகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

5. உருளைக்கிழங்கின் பருமனைப்பொறுத்து ஒவ்வொரு கிழங்கையும் 2 அல்லது 3 அல்லது 4 துண்டாகவெட்டலாம்.

6. ஒவ்வொரு துண்டமும் 1½ 2 அவுன்ஸ் நிறையுள்ளதாக இருத்தல் வேண்டும்.

7. கிழங்குகளை துண்டுகளாக்கப் பயன்படுத்தும் இடம் ஈரப்பதன் நிறைந்ததாக இருக்கவேண்டும்.

8 வெட்டப்பட்ட கிழங்குகளைச் சேமிக்கும் அறையும் ஈரப்பற்று உள்ளதாக இருத்தல்வேண்டும் [நிலத்தில் ஈரச்சாக்குகளை விரித்து அதன்மேல் வெட்டப்பட்ட கிழங்குப்பெட்டிகளை வைப்பதன் மூலமும் இடையிடையே சாக்குகளில் நீரைத்தெளித்து ஈரமாக்குவதன் மூலமும் இதனைச்செய்யலாம்)

9. சேமிப்பு அறை வெப்பநிலை 55—65பாகைபரனைட்டில் பாதுகாக்கப்படல் வேண்டும் (கட்டிடகூரையை கிடுகு அல்லது வைக்கோலால் மூடலாம்)

10. முதல் 2-3 நாட்களுக்கு வெட்டப்பட்ட துண்டுகளில் சூரியஒளி படக்கூடாது.

11. தொற்று நீக்கும் கரைசலுள் ஒவ்வொருமுறையும் அமுக்கப்படும் கத்தியாலேயே கிழங்குகள் வெட்டப்படல் வேண்டும்.

12. கிழங்கை முற்றாக வெட்டாது முழுக்கிழங்கும் அதே உருவத்தில் இருக்கும் வண்ணம் அரைப்பகுதிக்கு வெட்டவும். இதனால் துண்டுகள் உலர்வது தவிர்க்கப்படும்.

13. வெட்டப்பட்ட கிழங்குகளை 4 நாட்களுக்கு சேமித்து வைத்தபின் பங்கஸ்நாசினி தூளை (கரைசல் அல்ல) ஒவ்வொரு துண்டங்களையும் தனித்தனியாகப் பிரித்து தூவவும்.

14. மேற்சொன்ன குறைவான வெப்பநிலையிலும் உயர் ஈரப்பதனிலும் 7-8 நாட்களுக்கு துண்டங்களை சேமித்து வைத்தபின் நடுகைக்கும் பயன்படுத்தலாம்.

15. வெட்டியதுண்டங்கள் உயர்வெப்ப நிலையில் சேமிக்கப்பட்டால் வெட்டிய பாகங்களில் புதிய கலங்கள் உருவாவதற்கு அதிககாலம் எடுக்கும். இதன் காரணமாக நீர் இழப்பு ஏற்பட்டு துண்டங்கள் உலர ஆரம்பிக்கின்றன. இதனால் அவை வெடித்து நோய் ஏற்படலாம்.

16. சில இன விதைகிழங்கு இயற்கையாகவே அழுக ஆரம்பிப்பதால் அவற்றை வெட்டுகையில் மிகுந்த கவனம்வேண்டும்.

வெட்டிய துண்டுகளிலிருந்து இனம்பெருக்கப்பட்ட பயிர்கள் ஆரம்பத்தில் நலிந்து காணப்பட்டாலும் 1½ மாத காலத்தில் சாதாரண நிலைக்கு வந்துவிடுகின்றன.

### யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்குபயிர்கள் பின்ஞேக்கி இறத்தல

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1976ல் உருளைக்கிழங்கு பின்ஞேக்கி இறக்கும் நோயால் பாதிக்கப்பட்டது. இது குறித்து ஆராயப்பட்ட பொழுது அநேகளவு குளோரைட் அலகினாலேயே இது ஏற்பட்டது என ஆரம்பத்தில் எண்ணப்பட்டது. ஆனால் திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்த திருமதி வி. சண்முகநாதனின் வெளிக்களப் பரிசோதனைகளாலும் கட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகளாலும் சிற்றுண்ணிகளின் [மைறஸ்] தாக்கமே காரணமெனத் தெரிகிறது. சிற்றுண்ணிநாசினி [அக்காரிசைட்] ஒன்றினால் இவற்றை கட்டுப்படுத்தலாம். இலைகளிலே உணவை உண்ணும் இச்சிற்றுண்ணிகள் குறிப்பாக நுனிக்குருத்து பகுதிகளின் உணவை உண்கையில் இலைகள் நுனியிலிருந்து கருகி பின் ஓரங்களும் கருகி இறுதியில் இலைகள் முற்றாக கருகிவிடுகின்றன. அக்காரிசைட் ஒன்றை ஒழுங்காக விசிறுவதால் இப்பிரச்சினை தீர்க்கப்படலாம்.

### உருளைக்கிழங்கு உற்பத்தியில் உரக்கலவை அளவும் பயிர் அடர்த்தியும்

[2×10''] இடைவெளியிலே நடுகையை மேற்கொள்கையில் ஏற்குறைய 26 00 பயிர் ஏக்கர் காணப்படும். நடுத்தரப் பருமனைகொண்ட ஆர்க்கா இனங்களை மண்வளத்திற்கு ஏற்ப 35000 பயிர்/ஏக்கர் [1½''×10''] அல்லது 45000 பயிர் ஏக் [1½×8''] ஆக நடலாம்.

பயிரடர்த்தி 35000 பயிர் ஏக் ஆகவும் உரக்கலவையின் அளவு 22 அந்தர் ஆகவும் காணப்படுகையில் உயர்விளைவு பெறப்பட்டது. இங்கு உரத்துடன் பயிர்களின் அதிகரித்த எண்ணிக்கையால் ஏற்பட்ட நிழலே காரணமாக இருக்கலாம், இவ் அவதானிப்பு சீதாஎலிய விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை உத்தியோகத்தர் திரு எம். பாலசுப்பிரமணியத்தால் பெறப்பட்டது.

நன்றி: கமத்தொழில்
செய்திக் கதிர்.

**தொகுப்பு: பற்றிமாகரன்**

---

# 'பன்றிக் குஞ்சுகளும் கோழிக் குட்டிகளும்'

உழைக்கும் ஜனங்களின் துன்பம், அவர்களுடைய உடைத்துணர்வு; போராட்டம்; வெற்றி தோல்வி; எதிர்கால நம்பிக்கை; முழு சமுதாயத்தின் மீதும் படிந்துள்ள பற்று, இவையே மனித நேயமிக்க படைப்பாளிகளின் இலக்கிய பிரசவங்கள். சமூக உந்து சக்திகளின் ஆற்றலைப் பாடாததனால் எதற்காக எதை வெல்லாமோ பாடுகின்ற நீ இதோ இதை உணர்கிறாயா எனச் சாடி உழுதி விழுகிறார் கொ. மா. கோதண்டம் என்ற மனித நேயமிக்க படைப்பாளி

குறிஞ்சி நிலத்தில்
அடர்ந்த வனங்களில்
விண் தொடும் மரங்களை
வண்ணத் தளிர்களை
பணக்கும் மலர்களை
மதுப்பூத் தேனை காவை
கனியை
பாலை, மயிலை பசுமை
வளங்களை
கண்களை, மனதை
கவர்ந்திடும் எழிலை
கண்டு வியந்து
அழகிய அருவியில்
ஆடி மகிழ்ந்து
கவி செய்யும் புலவனே?
உச்சி மலைத்தோட்டங்களில்
உழைத்து வளம் பெருக்கி
உணவின்றி வயிறு சுருக்கி
வாழ இயலாமல்
நாங்கள் விடும் கண்ணீர்
அருவிகள் ஆனதை
அறிவாயா நீ

பொருளும், கவியழகும் மரபை மீறுகின்ற கோலங்களாக, மனித சமூகத்தின் மீது பாசமும், சர்வதேசியமும், புது உலகை ஆவலோடு நோக்கும் போக்கும் இவர் கவிதைகளெங்கும் மஞ்செனப் படர்ந்து செல்கின்றன. காண்கின்ற பொருள்களிலெல்லாம் கண்ணுக்குள் விழுகின்ற காட்சிகளெல்லாம் உழைப்பவர் தோற்றமே ஓடையோரம் ஒற்றைக்காலில் தவம் செய்யும் கொக்குகள் கூட,

'வைகறை வண்ணன்
கண்மாய்ப் பாறைகளில்
இருட்டாடைகளை
துவைத்து வெளுத்து
பிழிவதற்காக
; விரித்தவியாக
வைத்துள்ள
துண்டுகளோ!
என்றுதான் தோன்றுகின்றன.

எதிர்காலத்தின் மீது அசைவற்ற நம்பிக்கை, புரட்சி மூலம் புதிய உலகம் பூக்கப் போகும் அவா...

'எங்கள் வயல்களில்
நெற்கதிர்கள் சிரிக்கும்
காலத்தில்
வரப்போரங்களில்
வளைகளைத் தோண்டி
கொஞ்சம் கொஞ்சமாக
நெல்லைப் பதுக்கும்
ஓ...எலிகளே!
அறுவடை நடக்கப்
போகிறது
கடப்பாறைகளால்

உங்கள் வளைகள் தகர்க்கப் படப்போகின்றன—' 'பன்றிக் குஞ்சுகளும் கோழிக்குட்டி களும்' என்ற கொ. மா. கோதண்டத்தின் புதுக்கவிதைத் தொகுதியில் இத்தகைய அருமையான கவிதைகள் அடங்கியுள்ளன.

தமிழ்நாட்டின் தரமிக்கப் படைப்பாளர் வரிசையில் நிற்கும் கொ. மா. கோ. தமிழ்நாட்டின் பெரிய சங்கமான மணிமேகலையின் பருவதாண்டுத் தலைவராகப் பணிபுரிகிறார், ஆங்கிலம், பிரஞ்சு, உருஷ்யன் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள இவருடைய படைப்புகளில் அரண்ய காண்டம் (சிறுகதைத் தொகுதி) 'சின்னச் சின்ன அரும்புகள்', 'கன்னை-காவிரி', 'பன்றிக் குஞ்சுகளும் கோழிக்குட்டிகளும்' என்பவை புகழ் மிக்கவை, 'ஆசியா ஆபிரிக்கா டுடே டுடே' என்ற சோவியத் சஞ்சிகை உட்படத் தமிழ் நாட்டின் ஐம்பதுக்கும் மேற்பட்ட சஞ்சிகைகளில் இவருடைய சிரேஷ்ட மலர்கள் பூத்துள்ளன, அத்தனையும் மணமிக்க மலர்கள்.

**கே. விஜயன்**

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199, தந்தி: வைரம்.

# பாட்டுக்கொரு புலவன் பாரதி

என்றும் நம்மோடு வாழ்ந்து எம்மையும் வாழ்விக்கும் புலவர் மாகவி பாரதியாரின் நினைவுநாள் இம்மாதம் 12-ம் திகதியாகும். இந்நாளிலே இம் மாகவியை, பாட்டுக்கொரு புலவனை நினைவுகூரவேண்டியது மாணவர்களாகிய எமது கடமையாகும்.

கவிச்சக்கரவர்த்தி பாரதியாரின் பாடல்கள் 20-ம் நூற்றாண்டின் இணையற்ற படைப்புகள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இந்தியாவின் ஒளிச்சுடரான மாகவி பாரதியார் 1882-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி எட்டையபுரத்திலே சின்னச்சாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் இனிய தவப்புதல்வனாய் பிறந்தார்.

இவரது குல வழக்கப்படி இவருக்கு 7 வயதில் பூணூல் அணிவிக்கப்பட்டது. 1893-ம் ஆண்டில் 11 வயது நடைபெறும் பொழுது எட்டையபுர மன்னரின் சமஸ்தானப்புலவர்கள் அவையில் பாலகனின் கவித்திறனை வியந்து பாராட்டிப் புகழ்ந்து இவருக்குப் 'பாரதி' என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார்கள். 1897-ம் ஆண்டு ஆனி மாதம் 15-ம் திகதி 14 வயது பாரதிக்கும் 7 வயதுச் சிறுமி செல்லம்மாவிற்கும் திருமணம் இனிது நடைபெற்றது.

1903-ம் ஆண்டிலே மதுரையில் வெளிவந்த 'விவேகபானு' என்ற ஏட்டில் இவரது முதல் பாட்லான 'தனிமை இரக்கம்' அச்சில் ஏறியது.

1904-ம் ஆண்டிலே சுதேசமித்திரன் நாளிதழின் துணையாசிரியராகவும் 'சக்கரவர்த்தினி' என்ற திங்கள் இதழின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றினார்.

1905-ம் -1906-ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட பகுதி இவரது வாழ்வின் ஒரு திருப்புமுனைக் காலமாக விளங்கியது. அக்காலத்திலேதான் இவர் அரசியலிலே தீவிரப்பிரவேசம் செய்தார். கப்பலோட்டிய தமிழருடன் தொடர்புகொண்டார். நிவேதிதாதேவியைச் சந்தித்து ஆசிபெற்று அவரையே ஞானகுருவாக ஏற்றுக்கொண்டார்.

1907-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 'இந்தியா' என்ற வார ஏட்டின் ஆசிரியரானார். 'பாலபாரதம்' என்ற ஆங்கில ஏட்டையும் பொறுப்பேற்று நடத்தினார்.

1908-ம் 1910-ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட பகுதியில் கவிஞரின் போர்முரசுக்கு நாட்டில் ஆதரவு பெருகியது. இதனைக் கண்ட அரசினர் 'இந்தியா' என்ற இதழைப் படிக்கத் தடைவிதித்தனர். இதனால் பத்திரிகை வருவதும் நின்றது.

1912-ம் ஆண்டிலே 'பகவத் கீதை'யைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

1918-ம் ஆண்டு பொலிசாருக்குப் பயந்து மறைந்து வாழ்ந்த புதுச்சேரி வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டு அங்கிருந்து நவம்பர் 20-ம் திகதி பாரதியார் புறப்பட்டு பிரிட்டிஷ் எல்லையில் காலடி வைத்தார். அங்கு வைத்துப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு 34 நாட்களின் பின்பு விடுதலை செய்யப்பட்டார்.

1919-ம் ஆண்டு மார்ச் மாதம் மகாத்மா காந்தியைச் சந்தித்தார்.

1921-ம் ஆண்டு திருவல்லிக்கேணி கோவில் யானை பாரதியாரை வெறிகொண்டு தாக்கியதால் அதிர்ச்சி தாங்காது நோய்வாய்ப்பட்டார். 1921ம் ஆண்டுசெப்டம்பரில் வயிற்றுக்கோளாறு நோயால் பாதிப்புற்றார். அக்டோபர் 11-ம் திகதியளவில் நோய் கடுமையானது. 12-ம் திகதி அதிகாலை 1-30 மணியளவில் அவர் இறைவனடி எய்தினார்.

1948-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழர்கள் எட்டயபுரத்தில் இவருக்குமணிமண்டபம் எழுப்பினார்கள்.

1960 செப்டம்பர் 11-ல் கவிஞரின் தபால் தலையை இந்திய அரசு வெளியிட்டது.

இவர் இயற்றிய கவிதைகள் எமக்குக் கிடைத்த அரிய, பெரிய பொக்கிஷம். அதைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது எமது மாபெரும் கடமையாகும்.

ஜாதி மதங்களைப் பாரோம், எங்கள் பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்; சிங்களத்தீவினுக்கோர்பாலமமைப்போம் என்றெல்லாம் வீர முழக்கமிட்ட மாகவி பாரதியார் கண்ணனைத் தன் காதலனாகவும், கண்ணம்மாவைத் தன் காதலியாகவும் கற்பனையுலகில் கண்டு மகிழ்ந்து இனிய கவிதைகள் பல புனைந்தார்.

இவர் சிறுவர்களுக்கான இனிய கவிதைகள் இல்லையே என்ற குறையைக்கூட விட்டு வையாது "ஓடி விளையாடு பாப்பா..." போன்ற கருத்தும் செறிந்த பாடல்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார்.

இவர் தமது கவிவன்மையினாலே மக்களின் மனதில் சுதந்திர எண்ணத்தைவளர்த்தார்; அடிமைத்தனத்தின் இழிவை உணர வைத்தார். அனைவரும் படித்துப் புரிந்துகொள்ளக் கூடிய வகையிலே தனது கவிதைகளை எளியதமிழிலே இயற்றினார்.

பிறந்த நாட்டை பொன்னுடாக நினைத்து 'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும், நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்றார் இன்பக் கவி பாரதியார்.

கற்பனையிலே புதுமைப் பெண்ணைக் கண்ட பெருங்கவி பாரதியார். அவரின் கனவெல்லாம் இன்று நனவாகிக் கொண்டு வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

செல்வி ராஜ் ஈஸ்வரி தேவராஜன்
[யாழ். வேம்படி மகளிர் கல்லூரி]

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்

கிரிக்கட் டெஸ்ட் வரலாற்றில் இந்திய கிரிக்கட் கோஷ்டி இதுவரை அவுஸ்திரேலிய கோஷ்டிகளைஎந்த டெஸ்ட் தொடரிலும் வெற்றிபெறவில்லை என்பது இந்திய கிரிக்கட் விசிறிகளுக்கு ஒரு கசப்பான உண்மை.

32 ஆண்டுகளுக்கு முன்னர் முதல் தடவையாக இரு நாடுகளும் டெஸ்ட் ஆட்டத்தில் மோதிக்கொண்டன.

32 ஆண்டுகளிலும் இருநாடுகளின் கோஷ்டிகளும் 90

## ஆஸி-இந்திய கிரிக்கட் டெஸ்ட் கவாஸ்கருக்கு ஒரு சவால்

டெஸ்டுகளில் மோதியுள்ளன. இவற்றில் 5 டெஸ்ட்களில் மட்டுமே வெற்றியடைந்த இந்திய கோஷ்டிகளினால் ஒன்றுமே ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வெற்றிபெற முடியவில்லை.

19 டெஸ்ட்களில் இந்தியா தோல்வி அடைந்துள்ளது- 6 டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

கடைசியாக 1977ல் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற கிரிக்கட் டெஸ்டில் இந்தியக் கோஷ்டி 2 டெஸ்ட்களில் வெற்றியும் 3 டெஸ்ட்களில தோல்வியும் அடைந்து வெற்றிக்கிண்ணத்தை இழந்தது.

இப்போது மீண்டும் இந்தியாவில 5 டெஸ்ட் தொடர் ஆரம்பமாகியுள்ளது, முதலாவது டெஸ்ட் சென்னை சிதம்பரம் மைதானத்தில் கடந்த செவ்வாயன்று தொடங்கியுள்ளது.

அண்மையில் நடந்துமுடிந்த இங்கிலாந்து-இந்திய டெஸ்ட் தொடரில் இந்தியா தோல்வி அடைந்தாலும் 4-வது இறுதி டெஸ்டில் பலம் பொருந்திய இங்கிலாந்து கோஷ்டியை திணறடித்ததோடு, கிரிக்கட் ரசிகர்களையும் திகைப்பில் ஆழ்த்தியது. கிரிக்கட் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தம்.

இந்த சகாப்தத்திற்கு மூல காரணமாக இருந்து சாதனைகள் சிலவற்றை முறியடித்ததைத்தொடர்ந்து இரண்டாவது தடவையாக இந்தியக் கோஷ்டிக்கு காப்டனாக வந்துள்ளார் உலகப் புகழ் ஆரம்ப துடுப்படி வீரர் சுனில் கவாஸ்கர்.

32 வயதான கவாஸ்கரின் திறமைக்கு ஆஸி - இந்திய டெஸ்ட் ஒரு சவால்.

அனுபவம் குறைந்த ஆஸி கோஷ்டியில்-

இந்திய கோஷ்டியில் அனுபவம்மிக்கவர்களான புகழ்பெற்ற துடுப்படி வீரர் விஸ்வநாத், உலகப் புகழ் சுழல் பந்துவீச்சுவீரர் ஸ்ரீநிவாசன், வெங்கட்ராகவன், வெங்சாகர், சலாம் ஆகியோருடன் இளம் சுழல்பந்து வீச்சு வீரர் டிலிப் டோஷி வேகப் பந்துவீச்சு வீரர் கபில் தேவ்.

### சுதன்

இத்தனையும் கவாஸ்கருக்கு விடுக்கப்பட்டுள்ள சவாலைச் சமாளிப்பதற்கு உறுதுணைகள்.

32 ஆண்டுகளாக இந்திய வீரர்களினால் முடியாமற் போனதை இந்த டெஸ்ட்

(9ம் பக்கம் பார்க்க)

## கேக்

தேவையான பொருட்கள்

1 றின்பால்
3 முட்டைகள்
3/4 றாத்தல் கோதுமை மா
3 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்
1/2 இரு. மாஜரின்

செய்முறை

மாவையும் பேக்கிங் பவுடரையும் 3 முறை அரித்து வைக்கவேண்டும். வேறு ஒரு பாத்திரத்தில் மாஜரினைக் கொட்டி மரக்கரண்டியால் நன்றாக அடிக்கவேண்டும். பின்னதனுடன் றின் பாலையும் ஊற்றி அடிக்கவேண்டும். நன்றாக அடித்தபின் முட்டைகளை ஒவ்வொன்றாகச் சேர்த்து அடிக்க வேண்டும். பின்பு அரித்து வைத்த மாவையும் கலந்து அடிக்கவேண்டும். நன்றாக அடித்தபின் எண்ணெய் தடவிய trayயில் கொட்டி 350 பாகை—370 பாகை வெப்பத்தில் வேகவிடவேண்டும்.

செல்வி க. ரதினி
யாழ்: இந்து மகளிர் கல்லூரி.

### பாவேந்தன் பாரதி

எட்டயபுரம் பெற்ற எம்
இனிய பாவேந்தா
தட்டியே தமிழ் வீரம்
தரணியில் ஊட்டியவா
சாதி வெறி களைவதற்குச்
சங்காரம் முழங்கியவா
பாரினிலே உன்வாழ்வைப்
பறித்தனனே
காலனவன்!

த. நவநீதராஜா
யாழ். இந்துக்கல்லூரி.

## கொரில்லா அரக்கன்

### அத்தியாயம் - 5

அரசர் தீபராஜனுக்கு ஒரே மகிழ்ச்சி.

தனது ஒரே மகள் தீபாவின் செடுகாலமாகிய ஒரு வருடமும் மூன்று நாட்களும் முடிந்துவிட்டது.

இனி என்ன தமது மகளை அழைத்துவரவேண்டியது தானே. அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை

அரசன் தீபராஜனும் அன்று பொழுது புலர முன்னமே எழுந்து தனது காலைக்கடன்களை விரைவாக முடித்தார்

விடிந்ததும் விடியாததுமாக அரசர் தீபராஜன் தனது அறையைஅடைந்து அருகிலிருந்த அழகிய வெள்ளைப்பதுமையைத் தொட்டார். அந்த அப்பதுமை விலகி வழிவிட்டது; தீபராஜன் மிக்க மகிழ்ச்சியுடன் சுரங்கப் பாதையினூடே விரைந்தார்

சுரங்கப் பாதையை அடைந்த தீபராஜன் தீபாவை செல்லமாக அழைத்தார்;-

தீபா வரவில்லை, பலமாக அழைத்தார் தீபா வரவில்லை- தீபா வரவில்லை, மாளிகை முழுவதும் தேடினர். என்ன பலன்...ஏமாற்றந்தான்! எப்படி தீபா வருவாள்

இளவரசி தீபா கொரில்லா அரக்கனினால் கடத்தப்பட்ட செய்தி எப்படியோ அரசருக்கு எட்டிவிட்டது,

காட்டுத் தீயைப்போல் நாகதீபம் முழுவதும் இச்செய்தி பரவலாயிற்று இது கேட்டு நாகதீபமே சோகக் கடலில் ஆழ்ந்தது. எங்கும் ஓரே சோகம்

தீபா கொடிய அரக்கனால் கவர்ந்து செல்லப்பட்ட செய்தி கேட்டு படுத்தபடுக்கையிலேயே இருந்த அரசி வல்லிதேவி மாரடைப்பால் இறந்து போனாள். பாவம் தீபராஜன், தீபாவினதும் அரசி வல்லி தேவியினதும் பிரிவு அவரை வெகுவாக வாட்டியது.

இளவரசி தீபாவினதும் அரசி வல்லிதேவியினதும் பிரிவினால் சோகக் கடலில் ஆழ்ந்த நாகதீப மக்களுள் வேலனும் ஒருவன்,

வேலனும் நாகதீபத்தின் எல்லையை ஒட்டியிருந்த திருநெல்வேலி என்னும் கிராமத்தில் வசித்துவந்தான். துணிவும் வீரமும் மிக்க வேலனுக்கு உதாரர் பிறரினர் என்று சொல்வதற்கு எவருமிலர். இவன் அயலிலுள்ள காட்டிலே வேட்டையாடியே தனது வாழ்க்கையை நடாத்தி வந்தான், வேலனும் திருநெல்வேலி கிராமத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் உதவி புரிந்து அவர்களிடம் நன்மதிப்பைப் பெற்றிருந்தான்

அன்றும் வேலன் இளவரசியினதும் பிரிவினால் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருந்தான். அப்பொழுது 'வேலா! ஏன் கவலையில்மூழ்கியிருக்கிறாய்...?' என்றது ஒரு குரல்! இதைக் கேட்டு வேலன் யாரவர் என சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தா, அங்கு எவரையும் காணவில்லை, இது பிரமையோ என நினைத்து மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான் வேலன்.

[வளரும்]

வி. சந்திரகுமார்

### மாணவச் சிரிப்பு

ஆசிரியர்: சுந்தரம் 'யாதும் ஊரே யாவரும் கேளிர், என்ற பாட்டை பாடியது யார்?
சுந்தரம்: பாலசுப்பிரமணியம், சுசீலா.
ஆசிரியர்:.........?

கே. இரவிக்குமார்,
டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி.

ஆசிரியர்: பாலன் 'திருக்குறளை யார் இயற்றியது?
பாலன்: சத்தியமாய் நான் இயற்றவில்லை சார்.
ஆசிரியர்:.........?

ஆசிரியர்: ராமு இந்த பழமொழியை முடியாக்கவா ம். 'பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார்......'
ராமு: புக்கை தின்னுவார்.

ஆசிரியர்; குமார்! உன்னுடைய அப்பா போர்வையால் தன்னைப் போர்த்தார், இது என்ன காலம்?
குமார்; குளிர் காலம்.
ஆசிரியர்:.........?

வி. கே, இறமேஸ்,
டிறிபேக கல்லூரி,
சாவகச்சேரி.

### பூமி

சூரியனிலிருந்து சுமார் 9 கோடியே 29 லட்சம் மைல்களுக்கு இப்பால் உள்ள பூமியின் முழு அளவும் 19 கோடியே 70 லட்சம் சதுர மைல்களாகும்; இதில் 14 கோடி சதுர மைல் நீர்ப்பரப்பாகும். மிகுதி 5 கோடியே 70 லட்சம் சதுரமைல்களே நிலமாகும்.

### காற்று

காற்றில் 21 வீத பிராணவாயுவும் 78 வீதமுந்தவாயுவும் உள்ளது. மிகுதி 1 வீத மூலகலப்புக்கோற்றும்;

தொகுப்பு:'
-வ. ஜெகதானந்தன்.
விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

